ஏற்பட்டுவிடாமல் நம்மை முற்றிலும் பாதுகாக்கிறது.

பிறப்புறுப்புக் கழலை முன்பே ஏற்பட்டிருந்தாலும் HPV தடுப்பூசி எடுத்துக்கொள்வது நல்லது. இந்த ஊசி எடுத்துக்கொள்வதற்கு முன்பு வேறு ஏதேனும் HPV வகை தொற்றுகள் ஏற்பட்டிருந்தால் அதற்கு இந்த ஊசி பலனளிக்காது.

ஒன்றிற்கு மேற்பட்ட நபருடன் உடலுறவு கொள்ளுவதற்கு முன்பே இந்த ஊசியை எடுத்துக்கொள்வது நல்லது.

சிங்கப்பூரில், 9 முதல் 26 வயதுள்ள பெண்களுக்கு HPV தடுப்பூசி பரிந்துரைக்கப்படுகிறது. மருத்துவரின் ஆலோசனை பெற்று வயதான பெண்களும் இந்த ஊசி எடுத்துக்கொள்ளலாம். 26 வயது அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்களும் மருத்துவரின் ஆலோசனை பெற்று இத்தடுப்பூசி எடுத்துக்கொள்ளலாம்.

HPV தடுப்பூசி எடுத்துக்கொண்ட பெண்களும் தொடர்ந்து பாப்ஸ்மியர் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.


பாதுகாப்பான செக்ஸ் கடைபிடிக்கவும்

- உடல் திரவங்கள் பரிமாற்றம் இல்லாமல் செக்ஸ் (யோனி சுரப்பு மற்றும் விந்து).
- தவறாமல் ஆணுறை ஒவ்வொரு முறையும் பயன்படுத்தவும்
- செக்ஸ் முன் அல்லது போது அதிக அளவில் மது குடிப்பதை தவிர்க்கவும், இது உங்கள் கவனத்தை பாதிக்கக்கூடும்.

## பொறுப்புத்துறப்பு:

நாங்கள் இந்த நோயாளி தகவல் சிற்றேற்றில் தற்போதைய மருத்துவ சான்றுகள் மற்றும் கருத்துகள் அடிப்படையில், முழு மற்றும் சரியான விபரங்களை வழங்க முயற்சி செய்துள்ளோம். எனினும், தகவல் மற்றும் ஆலோசனைகள் பல்வேறு ஆதாரங்களில் இருந்தும், காலப்போக்கிலும் மாறுபடலாம். உங்களுக்கு மேலும் கேள்விகள் இருந்தால், உங்கள் மருத்துவர் அல்லது சுகாதாரச்சேவை வழங்குநரை அணுகவும்.

## எங்கள் இடங்குறிப்பு




**DSC கிளினிக்**
31 Kelantan Lane #01-16 S(200031)

### பஸ் சேவைகள்

23, 64, 65, 66, 67, 130, 139, 147, 857
Bugis (EWL/DTL)
Rochor (DTL)
Lavender (EWL/DTL)
Farrer Parkr (DTL)

HIV / STI பதி வு செய்யப ்பட்ட தகவ ல்கள்
6295 2944

HIV / STI அவசர உதவிக்கு
1800 - 2521324 (அலுவலக நே ரங்களில்)
எங்களிடம் முன்பதி வு செ ய்து க ொள்ளவும்

## எங்களுடண் சந்திப்பு முண்பதிவு செய்ய

சந்திப்பு முண்பதிவு மையத்தை அழைக்கவும்
6293 9648

அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
apptdsc@nsc.com.sg

மேலும் மருத்துவகம் தகவல் கிடைக்க எங்கள் இணையதளம் **WWW.DSC-CLINIC.SG**
அல்லது எங்கள் **FACEBOOK - WWW.FACEBOOK.COM/DSCSG**

GWV-M-1
Printed - January 2017

# பிறப்புறுப்புக் கழலை

(GENITIAL WARD VIRUS)

NATIONAL SKIN CENTRE

*DSC Clinic*

## பிறப்புறுப்புக் கழலை?

பிறப்புறுப்புக் கழலை என்பது ஹியூமன் பாப்பில்லோமா வைரஸ் மூலம் பரவக்கூடிய ஒரு பால்வினை நோய் ஆகும்.

நூற்றுக்கும் மேற்பட்ட ஹியூமன் பாப்பில்லோமா வைரஸ்கள் உள்ளன. பெரும்பாலான பிறப்புறுப்புக் கழலை கள் வகை 6 மற்றும் 11 வைரஸால் ஏற்படுகிறது. இந்த வகை வைரஸ்கள் கேன்சர் போன்ற கொடிய நோய்களை ஏற்படுத்தாத குறைவான ஆபத்துடைய வைரஸ் ஆகும்.

அதிக ஆபத்து நிறைந்த வைரஸ் வகை 16 மற்றும் 18 ஆகும். இது சில நேரங்களில் பிறப்புறுப்பு, கர்ப்பவாய் மற்றும் குதப்பகுதியில் கேன்சர் நோயை ஏற்படுத்துகிறது.

## ஹியூமன் பாப்பில்லோமா வைரஸ் எவ்வாறு பரவுகிறது?

HPV வைரஸ் நேரடியாக உடலுறவு கொள்வதன் மூலமும் கருப்பைவாய் செக்ஸ் மற்றும் குத செக்ஸில் ஈடுபடுவதால் பரவுகிறது. உடலுறவின் போது ஆணுறை பயன்படுத்து பாதுகாப்பைத் தருகிறது. ஆனால் இது 100% பாதுகாப்பைத் தருவதில்லை.

இந்த வைரஸ் தொடுவதாலோ அல்லது உயிரற்ற பொருட்களான கழிப்பறை மற்றும் கைக்குட்டை போன்றவற்றை பகிர்ந்து கொள்வதாலோ பரவுவதில்லை.

## நோய்த்தொற்றின் அறிகுறிகள் என்ன?

தோலின் மேற்பரப்பில் சதை வளர்ச்சி காணப்படும். இருப்பினும் இத்தொற்று ஏற்பட்ட எல்லோருக்கும் இந்த சதை வளர்ச்சி காணப்படுவதில்லை.

பெண்கள்

பெண்ணின் பிறப்புறுப்பு,கருவாய், கருப்பைவாய்க் குழாய் மற்றும் குதப்பகுதியில் கழலை ஏற்படுதல்

ஆண்

ஆண்குறியில் கழலை ஏற்படுதல். சில நேரங்களில் சிறுநீர் கழிக்கும் இடம் அல்லது குதப்பகுதியில் கழலை ஏற்படும்.

## அறிகுறிகள் தோன்றுவது எப்போது?

நோய்த்தொற்று ஏற்பட்ட அறிகுறிகள் தென்பட்டாலோ அல்லது உங்களுடன் உடலுறவு கொள்ளும் நபருக்கு பிறப்புறுப்பில் கழலை இருந்தாலோ சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.

சிங்கப்பூரில், 25 வயதிற்கு மேற்பட்ட உடலுறவு வைத்துக்கொள்ளும் அனைத்து பெண்களும் ஒவ்வொரு 3 வருடத்திற்கு ஒரு முறை பாப்ஸ்மியர் பரிசோதனை செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

- கழலை நோய்க்கான உடல் பரிசோதனை.
- கர்ப்பவாய்ப் பகுதியில் உள்ள திசுக்கள் கேன்சராக மாற வாய்ப்புள்ளதா என்பதை அறியும் பாப்ஸ்மியர் பரிசோதனை.

## பிறப்புறுப்புக் கழலைக்கு சிகிச்சையளிக்க முடியுமா?

கழலைக்கான சிகிச்சை கழலையை முற்றிலும் நீக்குவதாகும். ஆனால் இது HPV தொற்றை நீக்குவதில்லை.

- திரவ நிலை நைட்ரஜன் (கழலையை உறையச்செய்வது)
- கிரீம்கள் மூலம் நோய் தீர்க்கும் முறை

## பிறப்புறுப்புக் கழலையை எவ்வாறு கண்டறிவது?

- வேதியியல் சிகிச்சைமுறை
- அறுவை சிகிச்சை மூலம் அகற்றுதல்

கண்ணுக்குத் தெரிந்த கழலைகளை நீக்கிய பின்பும், சில நேரங்களில் இந்த வைரஸ் தோலில் இருந்து நீங்குவதில்லை. 30% மக்கள் இந்த நோய்த்தொற்றினால் மறுபடியம் பாதிப்படைகிறார்கள். சில HPV தொற்றுக்கள் 2-3 வருடங்களில் தானாகவே மறைந்துவிடுகின்றன.

சிகிச்சை மேற்கொள்ளும்போது புகைப்பழக்கத்தை தொடர்வது சிகிச்சைக்கான முழுபலனை கிடைக்கவிடாமல் செய்கிறது. மேலும் இந்த HPV தொற்று கேன்சராக மாறுவதற்கான வாய்ப்பையும் அதிகரிக்கிறது.

## பிறப்புறுப்புக் கழலை வேறு பாதிப்பை ஏற்படுத்துமா?

அதிக பாதிப்புள்ள HPV வகைத் தொற்றுக்கள் பெண்ணின் பிறப்புறுப்பு, கருப்பை வாய், கருப்பைக்குழாய், ஆண்குறி மற்றும் குதப்பகுதிகளில் கேன்சர் கட்டிகளை ஏற்படுத்தும்.

## கர்ப்பகாலத்தில் பிறப்புறுப்புக் கழலை:

கருவுற்றிருக்கும் போது இந்த கழலைகள் எண்ணிக்கையில் மற்றும் அளவில் பெரிதாகலாம்.

குழந்தைப் பிறப்பின் போது HPV தொற்றானது கருவில் இருக்கும் குழந்தைக்கு அரிதாக பரவுகிறது. பிறப்புறுப்பில் பெரிய கழலைகள் பிறப்பு வழியை மறைத்திருந்தால் அறுவை சிகிச்சை பரிந்துரைக்கப்படுகிறது.

கண்ணிற்கு புலப்படும் கழலைகள் உறைதல் அல்லது அறுவை சிகிச்சை மூலம் நீக்கப்படுகிறது. கருவுற்றிருக்கும் போது வேதியியல் சிகிச்சை செய்யப்படுவதில்லை. குழந்தை பிறந்த பிறகு கழலைகள் தானாக மறைய சிகிச்சை அளிக்கப்படுகிறது.

HPV தொற்று அல்லது கழலை இருப்பதால் கர்ப்பம் தரிப்பதை தவிர்க்க வேண்டிய அவசியமில்லை. பெரும்பாலான குழந்தைகளுக்கு இந்த கழலை தொடர்பான எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை. இருப்பினும் கழலை மற்றும் HPV தொற்று இருந்தால் முன்பே மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும்.

## தொடர்ந்து சிகிச்சைக்கு வரவேண்டுமா?

உடலில் உள்ள அனைத்து கழலைகளையும் நீக்கும் வரை தொடர்ந்து சிகிச்சை பெறுவது அவசியம். வீட்டில் இருந்தபடியே சிகிச்சை எடுத்துக்கொள்ளும் வசதியும் உண்டு.

HPV தடுப்பூசிகள்:

Gardasil மற்றும் Cervarix எனும் இரண்டு வித பாதுகாப்பான மற்றும் நல்ல பலனளிக்கக்கூடிய HPV தடுப்பூசிகள் சிங்கப்பூரில் கிடைக்கிறது.

முன்பே நோய்த்தொற்று ஏற்பட்டிருப்பின் இந்த ஊசிகள் பலனளிப்பதில்லை. இவை HPV நோய்த்தொற்று